සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

පිළිතුරු පත්‍රය
**Marking Scheme**

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: தமிழ் இலக்கிய நயம் | පත්‍රය / வினாத்தாள் / Paper |

## புள்ளித்திட்டம்

### பகுதி I

**01 (I) தொடக்கம் (V) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை.**

(I) அ. மருத்துவிச்சிப் பாடல்.
ஆ. பிரசவம் பார்த்த மருத்துவிச்சி குழந்தையை கையில் தூக்கியவாறு பாடப்படும் சந்தர்ப்பமாகும்.

(II) அ. மன்மதன்
ஆ. வாள் போன்ற கண்களையுடைய எம் கன்னியின் நல்ல நெற்றியிலுள்ள பொட்டின் அழகை கரும்பை வில்லாக உடைய மன்மதன் பார்த்தான். இதனூடாக பெண்ணின் அழகு சிறப்பிக்கப்படுகிறது.

(III) யாரால்- பால்காரனால்
யாருக்கு- மாடசாமிக்கு

(IV) அ. அன்னத்தின் சிறகு
ஆ. பெண்ணின் மென்மைத் தன்மை

(V) அ. குறிஞ்சித் தென்னவன்.
ஆ. உவமையணி
உயர்ந்தெழும் எண்ணங்கள் புடைத்தெழும் அரும்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
உவமானம்- அரும்பு
உவமேயம்- எண்ணங்கள்
பொதுத்தன்மை- மேலெழுதல்

4×5=20 புள்ளிகள்

**02.** பொருத்தமான வகையில் புள்ளிகளை வழங்குக.

ஈ. கட்டித்தயிரை பிசைந்த காந்தல் போன்ற மென்மையான விரல்களால் தன் உயர் ரக பட்டாடையின் பெறுமதியை பொருட்படுத்தாது அதைச் சரி செய்தாள் என்பதனூடாக கணவனுக்காகச் செய்யும் புளிக்குழம்பு கெட்டுவிடக் கூடாது என்பதானது கணவன் மீது மனைவி கொண்ட அக்கறையை காட்டி நிற்கிறது.

உ. கலிங்கம்- உயர் ரக பட்டாடை
பாகர்- குழம்பு
முளிதயிர்- கட்டித் தயிர்
அட்ட- சமைத்த
கழுமத்- நிறைய

5×5=25 புள்ளிகள

பகுதி **II**

**03.**

அ. நேற்று வாங்கிய புத்தம்புது மணச்சவர்க்காரத்தை இன்று காணவில்லை. எலிக்கு எதற்காக அந்த மணச்சவர்க்காரம் எடுத்தது என்பது அவனுக்கு புரியவில்லை. ஒருவேளை எலி தனது மனைவி அல்லது காதலியான எலிஸாவுக்கு கொண்டு போய் கொடுக்காவிட்டால் அது முகத்தை திருப்பிக் கொள்ளுமோ? என்பதன் ஊடாக எலியால் அனுபவித்த துன்பத்தை நகைச்சுவையுடன் கூறுகிறார் ஆசிரியர்.

ஆ. லதா மங்கேஸ்கரின் மீரா பஜனையை அவன் நேற்றிரவு கேட்டுக்கொண்டிருந்தான். எம்.எஸ் சுப்புலெட்சுமியின் மீரா பஜனைக்கும், இதற்குமுள்ள பிரத்தியேக விஷயங்கள் குறித்து அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த போது தொப்பென்று ஓர் எலி கட்டிலில் விழுந்த சம்பவம் விளக்கப்பட வேண்டும்.

இ. அவனது வீட்டின் பின்புறத்தில் ஒரு பாழ்வளவு இருக்கின்றது. குட்டையாகவும், நெட்டையாகவும் பற்றைகள் அங்குண்டு. அந்த வளவுக்குள் வெறுங்காலால் நடந்தால் உடைந்த போத்தல் ஓடுகளோ, கற்கள் ஆணிகளோ, முட்களோ காலில் தேசம் விளைவிப்பது நிச்சயம். குப்பை கொட்டும் பிரதேசமாக அயலவர்கள் அதை ஆக்கிவைத்திருந்தனர். அந்த வளவு மூலையில் ஓர் அநாதைக் கார் குப்புறக்கிடந்தது.

ஈ.

- சவர்க்காரம் திருடப்பட்டமை
- தீக்குச்சி அளவில் முழங்காலில் ரத்தக் கீறல் ஒன்று.

உ. இந்த நாடு இறக்குமதி செய்த முதல் நூறு கார்களுள் இதுவும் ஒன்றாக இருந்திருக்கும்.இந்தக் காரை வாங்கியவனின் பேரனோ அல்லது கொள்ளுப் பேரனோ காலப்போக்கில் இந்தக் காரின் வடிவமைப்பையும் தாத்தாவின் ரசனையையும் சகிக்கமுடியாமல் இப்படிப் போட்டிருக்கவேண்டும்.

5×5=25 புள்ளிகள்

4.

- கன்ஃபூஷியஸ்- சீடர்கள் உரையாடல்- பல்- நாக்கு விளக்கம்.
- நெருப்பு- நீர்
- காற்று மென்மையானது புயலாக மாறினால் பெரிய மரங்களை சாய்த்துவிடுகிறது மென்மையான நாணல் புல் தப்பிவிடுகிறது.
- பூகம்பத்தில் வன்மையான வீடுகள் அழிய மென்மையான சிலந்தி வலை தப்பிவிடுகிறது.
- வன்மையான கல்லை மென்மையான வேர் பிளத்தல்.
- வலிமையானவர்கள் போருக்கு அனுப்பப்ட்டு மடிய மென்மையான முதியவர், பெண்கள், குழந்தைகள் தப்பிவிடுகிறார்கள்.
- ‘‘வாளை உருவியவன் வாளாலேயே சாவான்’’ என்ற பைபிளின் கூற்று.
- பாலைநிலம் பற்றிய விளக்கம்.

5.

- குமரனை தன் குழந்தையாக எண்ணல்.
- தனது கன்றை பால் குடிக்க விடாது கட்டிப்போட்ட பின் தாய்ப் பசு படும் வேதனை.
- வைக்கோல் போர் அடைக்கப்பட்ட கன்றுக் குட்டியைப் பார்த்து ‘‘பசுவின் மடியில் பாலும் சுரந்தது, கண்ணீரும் வழிந்தது.
- பொங்கல் மோதி உருட்டிவிடல்.
- காளை மாட்டின் பழிக்குப் பழி, கொலைக்கு கொலை என்ற ஆவேசத்தை தடுத்தல்.

6.

- ஆராய்ந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்தவர்கள்.
- நீண்ட கூந்தலை உடையவர்கள்.
- மென்மைத் தன்மையும், வெள்ளிய பற்களையும், சங்குகளால் ஆகிய வெண்மையான வளையல்களையும் அணிந்திருப்பவர்கள்
- சிலம்புகளின் பரல்கற்கள் ஒளி செய்தன.
- விற்படை போலவும், வாட்படை போலவும் பிரகாசிக்கும் ஆபரணத்தை அணிந்தவர்கள்.
- முரசு போல் ஒலியெழுப்பும் மேகலையை இடையில் அணிந்தவர்கள்……….

7.

- ‘‘மதியும் மடந்தை…….’’- விளக்கம்
- ‘‘அறுவாய் நிறைந்த …….’’- விளக்கம்
- ‘‘மாதர் முகம் போல……..’’- விளக்கம்
- ‘‘மலர்அன்ன கண்ணாள்……’’- விளக்கம்

15×2=30 புள்ளிகள்